# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 160/51 — 1975 අප්‍රේල් 19 වැනි සෙනසුරාදා — 1975.04.19

160/51 ம் இலக்கம்—1975 ம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 19 ந் திகதி சனிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (I)—பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

ச. அ. எண் : டபிளியு. 68 (50)/75.

**1975 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க அவசரகால (நானாவித ஏற்பாடுகளும் தத்துவங்களும்) ஒழுங்குவிதிகள்**

1975 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க அவசரகால (நானாவித ஏற்பாடுகளும் தத்துவங்களும்) ஒழுங்குவிதிகளின் 18 ஆம் ஒழுங்கு விதியின் (5) ஆம் பந்தியின் கீழ் சனாதிபதியால் ஆக்கப்பட்ட விதிகள்.

வி. கோபல்லாவ,
சனாதிபதி.

நுவரெலியா,
1975 ம் ஆம் ஏப்பிறல் மீ 19 ந் தே.

விதிகள்

1. 1975 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க அவசரகால (நானாவித ஏற்பாடுகளும் தத்துவங்களும்) ஒழுங்கு விதிகளின் 18 ஆம் ஒழுங்குவிதியின் (1) ஆம் பந்தியின் கீழ்ப் பாதுகாப்பு, வெளிவிவகார அமைச்சின் செயலாளரால் கட்டளை ஒன்று அவர் பொருட்டு இடப்பட்டு அது செயல் முறையில் நிறைவேற்றப்பட்ட யாருமொரு ஆள் அக்கட்டளை செயல்முறையில் நிறைவேற்றப்பட்ட திகதியிலிருந்து 20 நாட்களுக்குள், அந்த ஒழுங்கு விதியின் நோக்கத்திற்காக நியமிக்கப்பட்ட ஆலோசனைக் குழுவின் பரிசீலனைக்கு அக்கட்டளைக்கெதிராக எழுத்துருவ ஆட்சேபனைகளைச் சமர்ப்பிக்கலாம்.

2. முதலாம் விதியிற் குறிப்பிடப்பட்ட எழுத்துருவ ஆட்சேபனைகளைச் சனாதிபதியின் செயலாளரின் அலுவலகத்திற்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பலாம், அல்லது அவ்வலுவலகத்தில் ஒப்படைக்கலாம்.

3. ஓர் ஆலோசனைக் குழுவின் பரிசீலனைக்கு ஏதும் ஆட்சேபனைகளைச் சமர்ப்பிக்கும் ஒவ்வோர் ஆளும், அவருடைய ஆட்சேபனைகள் அக்குழுவின் பரிசீலனைக்கு எடுபடும் பொழுது, அக்குழுவின் முன்பு நேர்முகத் தோற்றமளிக்கவும், அல்லது ஒருவர் சட்டத்தரணி மூலம் அல்லது அவரால் முறைப்படி அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் முகவர் மூலம் பிரதிநிதித்துவம் வகிக்கப்படவும் உரித்துடையராவர்.


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.